# மத்தியமாகாணக் கல்வித் திணைக்களம்
# கண்டி
## அலகுப் பரீட்சை - 03

பாடம் : இந்துநாகரிகம் நேரம் : 1 மணி

1. முருக வழிபாட்டுடன் தொடர்புடைய ஆடல் எது?

   1. பாண்டரங்கம் 2. துணங்கைக் கூத்து 3. வெறியாடல் 4. கொடு கொட்டி 5. அல்லியம்.

2. மங்கள சாசனம் பெற்ற திவ்ய தேசங்களின் உருவாக்கத்திற்கு அடித்தளமிட்டவர்கள்

   1. யோகிகள் 2. நாயன்மார்கள் 3. மன்னர்கள் 4. ஆழ்வார்கள் 5. சித்தர்கள்.

3. தென்னிந்திய கோயிற் கட்டட வரலாற்றில் கோபுரங்கள் மிகுதியாக அமைக்கப்பட்ட காலம்

   1. பல்லவர் காலம் 2. சோழர் காலம் 3. சங்க காலம் 4. சங்கமருவிய காலம்

   5.விஜய நகர நாயக்கர் காலம்

4. ஆமுக்த மால்யதா என்ற ஆண்டாள் கதையை இயற்றியவர்

   1. காசிவாசி செந்திநாதய்யர் 2. துளசிதாசர் 3. இராமானந்தர் 4. மத்துவர் 5. கிருஷ்ண தேவராயர்

5. ''கலியுகத்தில் அசரீரி கேட்டவன்'' என்று சாசனங்களில் குறிப்பிடப்படும் மன்னன்.

   1. மகேந்திர வர்மன் 2. மாமல்லன் 3. இராசசிம்மன் 4. நந்திவர்மன் 5. நரசிம்மன்

6. சோழர் கால சின்னமாக அமைவது

   1. இலிங்கம் 2. நடராஜர் 3. மயில் 4. சிங்கம் 5. கருடன்

7. பல்லவர் காலத்தில் தமிழகத்தில் வைத்துக் கல்வியைப் போதித்த கல்வி நிறுவனம்

   1. திண்ணைப்பள்ளிக் கூடம் 2. அரண்மனை 3. காஞ்சி கடிகை தானம் 4. குருகுலம்

   5. வியாகரண மண்டபம்

8. கங்கை கொண்ட சோழேஸ்வரத்தை கட்டிய மன்னன்

   1.விஜயாலய சோழன் 2. இராஜ இராஜ சோழன் 3. பராந்தகன் 4. இராஜேந்திர சோழன்

   5. குலோத்துங்க சோழன்.

9. சக மார்க்க நெறியில் நின்று இறைவனை வழிபட்டு முத்தியின்பம் பெற்றவர்

   1.திருநாவுக்கரசு நாயனார் 2. கண்ணப்பநாயனார் 3. திருஞான சம்மந்தர் 4. சுந்தரமூர்த்திநாயனார்

   5. மாணிக்கவாசகர்

10. சிவாலயங்களுக்கு சொத்தான நிலப்புலங்களாக அமைவது

    1. திருவிடையாட்டம் 2. தேவதானம் 3. மானியம் 4. நிருத்தவிடங்கியர் 5. சொத்துவழங்குதல்

11. விஷ்ணு சித்தீயம் என்னும் நூலை எழுதியவர்

    1. இராமானுஜர் 2. சங்கரர் 3. கிருஷ்ண தேவராயர் 4. கரிகரன் 5. அச்சுதராயர்

12. ''மாயோன் மேய காடுறை உலகமும்'' என்ற வரிகள் மூலம் திருமாலைப் போற்றும் சங்க இலக்கியம்

    1. திருமுருகாற்றுப்படை 2. தொல்காப்பியம் 3. அகநானூறு 4. பரிபாடல் 5.பதிற்றுப்பத்து

13. ஆகமப் பிரியன், சைவசித்தாந்த மார்கன், ரிஷபலாஞ்சனன் எனும் விருதுப்பெயர்களை கொண்ட மன்னன்.

    1. நந்திவர்மன் 2. மகேந்திரவர்மன் 3. பரமேஸ்வர வர்மன் 4. இராசசிம்மன் 5. மாமல்லன்

14. மகாபாரதத்திற்கு கிருஷ்ண சந்தம் என்னும் உரையை எழுதியவர்

1. சானாவதிம்மர் 2. ஸ்வர தீட்சிதர் 3. இராமராயர் 4. முதலாம் புக்கன் 5. கரிகரன்

15. விஜய நகர பேரரசு நிறுவப்பட்ட ஆண்டாக அமைவது

1. 1230 2. 1336 3. 1740 4. 1509 5. 1387

16. சோழர் காலத்தில் தலைநகரமாக விளங்கியது

1. காஞ்சி 2. மகாபலிபுரம் 3. இலங்கை 4. தஞ்சை 5.கர்நாடகா

17. சங்க காலத்தில் ஆரிய-திராவிட இணைப்பைக்காட்டும் வழிபாடு

1. சிவ வழிபாடு 2. பாவை நோம்பு 3. சந்தியா வந்தனம் 4. கொற்றவை வழிபாடு 5.முருக வழிபாடு

18. மகேந்திர வர்மனின் விருதுப் பெயர்களைக் கொண்ட தொகுதி

1. 3ம் சிம்மவர்மன், வித்தியா விந்தன்
2. சிவ சூடாமணி, சங்கர பக்தன்
3. சித்திரகாரபுலி, குணபரன்
4. ஷேத்காரி, சிவசூடாமணி
5. ஷேத்காரி, குணபரன்

19. பல்லவர் காலத்தில் பெரிய திருக்கற்றளி என சிறப்பிக்கப்பட்ட தலம்

1. தஞ்சைப் பெரியகோயில்
2. காஞ்சி கைலாசநாதர் கோயில்
3. மாமல்லபுரம் கடற்கரைக் கோயில்
4. இரதக் கோயில்கள்
5. மகாபலிபுரம்

20. பரமேசுவரவர்மனின் ஆழ்ந்த சிவபக்தியை எடுத்துக்காட்டும் கல்வெட்டாக அமைவது

1. மாமல்லபுரக் கணேசர் கோயில் கல்வெட்டு
2. நாகையூர்க் கல்வெட்டு
3. திருச்சிராப்பள்ளி குகைக்கோயில் கல்வெட்டு
4. காஞ்சிபுரம் உத்தரமேரூர் கல்வெட்டு
5. திருச்சி மண்ணச்சநல்லூர் கல்வெட்டு

(2*20=40)

பகுதி-11

- மூன்று வினாக்களுக்கு விடை தருக.

1. சங்ககாலத்து சமய நிலையை ஆராய்க.

(20 புள்ளிகள்)

2. பல்லவர் காலம் தொடர்பாக மேல்வரும் விடயங்களை விளக்குக.
    1. அரசியல் சமூக சூழ்நிலை
    2. நாயன்மார்களின் பணிகள்
    3. அரசர்களும் சைவ மரபும்
    4. வேதாகம மரபுகள்

(3+7+6+4=20 புள்ளிகள்)

3. தமிழக வரலாற்றில் பொற்காலம், சோழர் காலம் என்பதைக் கருத்திற் கொண்டு மேல்வரும் விடயங்களை விளக்குக
    1. சோழ அரசும் சைவ நெறியும்
    2. சோழ ஆட்சியில் வைணவம்
    3. இலக்கியங்கள்

(12+4+4=20 புள்ளிகள்)

4. தென்கை வரலாற்றில் விஜய நகராட்சியில் இந்துப்பண்பாட்டின் சிறப்பம்சங்களை மேல்வரும் தலைப்புகளில் விபரிக்குக.
    1. சமய நிலை
    2. விஜய நகர ஆட்சியும் வடமொழி இலக்கியச் சிறப்பும்
    3. நாயக்கர் கால சைவ இலக்கிய எழுச்சி

(12+4+4=20 புள்ளிகள்)